# SG Digital

## ஃபேர்பிரைஸ் வருடிச் செல்க சேவையின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

FairPrice Scan & Go வாடிக்கையாளர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் மூத்த குடிமக்கள்! FairPrice Scan & Go உடன், மூத்தோர்கள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்கலாம். அதோடு முன்னோடி, மெர்டேக்கா, மூத்த குடிமக்கள் ஆகியோருக்கான தள்ளுபடிகளையும் பயன்படுத்தலாம்!

## படிநிலை 1 — உங்கள் கைப்பேசியில் ஃபேர்பிரைஸ் செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **ஃபேர்பிரைஸ்** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 — உங்கள் கணக்கை அமைத்திடுங்கள்










3. ஒரு கணக்கைத் தொடங்க, "More", மற்றும் "Account" தேர்ந்தெடுத்து, உங்களது மின்னஞ்சல் முகவரி, கைப்பேசி எண், மறைச்சொல் ஆகியவற்றை உள்ளிட்டு பதிவு செய்யுங்கள்.

4. உங்கள் பொருட்களுக்கு எளிதில் பணம் செலுத்த, உங்களது கட்டண விவரங்களை அமைத்திடுங்கள்.

5. நீங்கள் தள்ளுபடிகளும் இதர சலுகைகளும் பெற, உங்களது **PLUS! கணக்கையும்** இணைக்கலாம். அதோடு ஃபேர்பிரைஸின் அனைத்து அதிர்ஷ்டக் குலுக்கல்களிலும் பங்குபெற "**Lucky Draw**" பெட்டியில் குறியிடலாம்.

## படிநிலை 3 — வருடிக்கொண்டே சென்று பொருட்களை வாங்குங்கள்!




6. ஃபேர்பிரைஸ் செயலியைச் செயற்படுத்துங்கள் சின்னத்தின்மீது தட்டி, ஜிபிஎஸ் இடமறியலை அனுமதித்து உட்பதிவு செய்யுங்கள்.




7. வாங்கிக்கொண்டே செல்லுங்கள் நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களின் பட்டைக் குறியீட்டை வருடி, செயலியில் பணம் செலுத்துங்கள். .




8. பூர்த்தி செய்யுங்கள் நீங்கள் வாங்கிய பொருட்களையும் மின்-ரசீதையும் ஃபேர்பிரைஸ் வருடிச் செல்க (Scan & Go) சாதனத்தில் சரிபார்த்து கொள்முதலைப் பூர்த்தி செய்யுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது இணைய ஃபேர்பிரைஸ் கணக்குக்கு, குறைந்தது 12 வெவ்வேறு வகையான எண்ணெழுத்துகளுடன் வலுவான மறைச்சொல்லை உருவாக்குங்கள் (அதாவது, UPPERCASE, lowercase, 1234, !@#$).
- உங்களது ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல், மறைச்சொல் அல்லது மற்ற தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- கடன்பற்று / ரொக்கக்கழிவு அட்டைக் கட்டண மோசடிகளை உங்கள் வங்கியிடம் தெரியப்படுத்தி, உடனடியாக உங்கள் அட்டையை ரத்து செய்யுங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY